| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| இயக்குநர்,<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600 006. | அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் |

**ந.க.எண். 013041/எச்1/2024** **நாள் : 22.11.2024**

**ஐயா /அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –6– மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு மார்ச் – 2025 – பெயர்ப்பட்டியல் சார்பாக மாணவர்களின் விவரங்களை கோருதல் – சார்பு.

*****

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படும் பட்டியலில் காணும் தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளில் உள்ள மாணவர்கள் 2023–2024 ஆம் கல்வியாண்டில் மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்விற்கு பதிவு செய்து பெயர்ப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். ஆனால், இத்தேர்வர்கள் எவரும் மார்ச் 2024 மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வெழுத வருகை புரியவில்லை.

இந்நிலையில், மேற்படி தேர்வர்கள் 2024– 2025 ஆம் கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்விற்கான பெயர்ப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர் என்பதால், அவர்களின் வருகைப் பதிவினை ஆய்வு செய்து, அந்தந்த பள்ளித் தலைமையாசிரியரிடம் தேர்வரின் தகுதியினை உறுதி செய்து, அதன் விவரத்தினை 27.11.2024 –க்குள் dgeh1sec@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–

**இயக்குநர்**

**இணைப்பு :** மேற்கண்ட பட்டியல்

**நகல்:**

அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்– தகவலுக்காக மற்றும் தொடர் நடவடிக்கைக்காக

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –6– மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு மார்ச் – 2025 – பெயர்ப்பட்டியல் சார்பாக சில மாணவர்களின் விவரங்களை கோருதல் – அனுமதி வேண்டுதல் –

சார்பு.

******

<u>பணிந்தனுப்பப்படுகிறது:–</u>

தொழில்நுட்பப் பிரிவிலிருந்து பெறப்பட்ட விவரங்களின்படி, 2023–24–ஆம் கல்வியாண்டில் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கு பதிவு செய்த தேர்வர்களில் <u>9049</u> எண்ணிக்கையிலான தேர்வர்கள் முதலாமாண்டு தேர்விற்கு வருகை புரியவில்லை என அறியவருகிறது. இத்தேர்வர்களில் <u>4745</u> எண்ணிக்கையிலான தேர்வர்கள் தற்போது இரண்டாமாண்டு நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மீதமுள்ள <u>4304</u> தேர்வர்கள் முதலாமாண்டு அனைத்து பாடங்களுக்கும் வருகை புரியாத நிலையில், தற்போது இரண்டாமாண்டு பெயர்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். அத்தேர்வர்களின் விவரங்களை அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பி வைத்து, அவர்கள் தற்போது அப்பள்ளிகளில் பயின்று வருகின்றனரா இல்லையா என்பதனை ஆய்வு செய்து, அதன் விவரத்தினை 27.11.2024 –க்குள் dgeh1sec@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரலாமா என்பதற்கு இயக்குநர் அவர்களின் ஆணை பணிந்து வேண்டப்படுகிறது.

மேலும், ஆணையினை எதிர்நோக்கி அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பும் கடித வரைவு இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

'அ'– ஆணைக்காக

'ஆ' –ஒப்புதலுக்காக